1974 மார்ச் 7]

*313 வினா—**திரு. கா. வேழவேந்தன்** : முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டத்திலும், பொன்னேரிப் பேட்டைத் துணை வட்டத்திலும் தற்போது எத்தனை பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது ?

(இ) இதனை தகுதியுள்ள மற்றவர்களுக்கும் நீடிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) கும்முடிப்பூண்டி துணை வட்டத்தில் 83 பேர்களுக்கும், பொன்னேரிப்பேட்டை துணை வட்டத்தில் 203 பேர்களுக்கும் முதியோர் உதவித்தொகை கொடுக்கப்பட்டு வருகிறது.

(இ) தற்போதைய நிதி நிலையில் மற்றவர்களுக்கு நீடிப் பதற்கு வாய்ப்பு இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த முதியோர் பென்ஷன் வழங்கும் முறை ஆரம்ப காலத்தில் பெறுவதற்கு எவ்வளவு பேர் தகுதி பெற்று இருந்தார்களோ அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் தகுதி பெற்றவர்கள் எவ்வளவு பேர் இருந்தாலும், இதற்கு முன் பென்ஷன் பெற்றுக் கொண்டிருந்தவர்கள் யாராவது இறந்தால் அவர்களுக்குப் பதிலாக ஓரிரண்டு பேர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். இந்தப் பென்ஷன் பெறுவதற்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டுமென்று விதி முறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன ? அந்த விதி முறைகளையொட்டி தகுதி பெற்று இருக்கும் அத்தனை பேருக்கும் பென்ஷன் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த முதியோர் உதவித் தொகை கொடுப்பது என்ற திட்டம் 1962-ல் தீட்டப்பட்டது. 1962-ல் ரூ. 51 லட்சம் முதியோர் பென்ஷன் கொடுப்பதற்காக தரப்பட்டது. இப்போது ரூ. 1 கோடிக்கு மேலாகத் தந்து கொண்டு இருக்கிறோம். ரூ. 1 கோடி என்று வரையறை செய்து விட்டதால், அதற்குள் வரும் எண்ணிக்கைக்குத்

தான் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதற்கும் அதிகமான பேர்களுக்கு அளிப்பது என்று சொன்னால், நிதிநிலை அதற்கு இடம் தராது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் இப்போது 1 கோடி ரூபாய் அளவுக்கு அதிகப்படுத்தித் தருகிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொன்னார்கள். இதிலே பிற்பட்ட பகுதிகள், முற்பட்ட பகுதிகள் என்ற வேற்றுமையின்றி, வட்டத்திற்கு 200 பேர் என்று ஒரு உச்சவரம்பு நிர்ணயித்து இருக்கிறார்கள். இதிலே வாங்காத சில முற்பட்ட பகுதிகளும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பிற்பட்ட பகுதிகளுக்கு மாற்றி, தகுதியுள்ள எல்லோருக்கும் வழங்கும்படி செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புதிதாக வேண்டுமானால் அதைப்பற்றி யோசிக்கலாம். ஏற்கனவே வழங்கப்படுவதை நிறுத்தி மற்றவர்களுக்கு வழங்குவது என்பது இயலாத காரியமாகும்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, முதியோர் பென்ஷன் தொகையை உயர்த்த அரசிடம் திட்டம் இருக்கிறதா? பல முதியோர்கள் பென்ஷனுக்காக விண்ணப்பித்தும், அவர்களுக்கு பென்ஷன் கிடைக்காத நிலை இருக்கிறது. அந்த விண்ணப்பங்களின் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க அரசு திட்டம் வகுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்போதுள்ள நிதி நிலைமையில் முதியோர் வயது வரம்பை உயர்த்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே தொகையை உயர்த்த கிஞ்சித்தும் இடம் இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இந்த முதியோர் பென்ஷன் திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம் மாநிலத்தில் மட்டுமே இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக 1967-க்கு பின்னாலே தான் முதியோர் பென்ஷன் வழங்கும் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

TRUTH ALONE TRIUMPHS

1974 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது தவறு. அந்தப் பெருமையை 62-லே இருந்த காங்கிரஸ் அரசுக்கே தந்து விடலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இது காங்கிரஸ் ஆட்சி காலத்திலே முதியோருக்காக ரூ. 20 கொடுப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது 65 வயதிற்கு மேற்பட்டு, எந்தவிதமான பாதுகாப்பும், ஆதரவும் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது என்று கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகு ஏராளமான பேர் இன்றைக்கு அந்தத் தகுதியை அடைந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் கிடைக்கவில்லை. காரணம் ஏற்கனவே இவ்வளவு பேர் என்று நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதால், அந்த வயதை அடைந்து பென்ஷன் பெறுவதற்குத் தகுதி பெற்று இருந்தாலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, இத் திட்டத்தை விரிவாக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? இவர்களுக்கு அரசு பரிகாரம் காணுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதை மேலும் விரிவாக்கும் உத்தேசம் இல்லை. நம்முடைய நிதி நிலை அறிக்கையில் அங்கஹீனர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகத் திட்டம் தீட்டியிருக்கிறோம். இப்போது 60 வயதை எய்திய கூன், குருடு, தொழு நோய், அறிவு வளர்ச்சி இன்மை, வாதம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதற்குக் கீழ் உள்ள வயதுள்ளோருக்கும் அங்கஹீனம் அடைந்து அதன் காரணமாக உழைக்கும் திறனை இழந்தவர்களாக இருந்தால் அவர்களுக்குத் தரப்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டால் ஓரளவு அவர்கள் கஷ்டம் குறையும் என்று கருதுகிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்த முதியோர் உதவித் தொகை பெறுகிறவர்களில் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் ? ஆண்களைவிட பெண்கள்தான் அதிகம் கஷ்டப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக விதவைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் 40 வயது ஆகியிருந்தால்—அப்படிப்பட்டவர்களுக்கு பென்ஷன் தொகை அளிக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதிலே ஆண்கள் எத்தனை, பெண்கள் எத்தனை என்ற தகவல் இல்லை. மாவட்டத் தலைமை அலுவலகங்களில் தான் கிடைக்கும். தனிக் கேள்வி போட்டால் சேகரித்து, அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு என்னென்ன விதிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் தொடக்கத்திலேயே சொன்னேன். 65 வயதும் அதற்கு மேற்பட்ட எவ்வித ஆதரவும் அற்றவர்களுக்கும், 60 வயதும் அதற்கு மேற்பட்ட குருடு, தொழுநோய், அறிவுத் தன்மையின்மை, வாதம் அல்லது உறுப்புகள் இழந்ததன் காரணமாக உழைக்கும் திறனை இழந்தவர்களாகவும், ஆதரவற்றவர்களாகவும் இருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கும் இவ்வுதவி வழங்கப்படுகிறது.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, முதியோர் பென்ஷன் தொகை பெறுவதில் காலதாமதம் ஆகிறது. அப்படிப்பட்ட தாமதத்தைத் தவிர்க்க தாலுக்கா தாசில்தார், மற்றும் அதிகார சம்பந்தம் இல்லாத வேறொருவரையும் போட்டு ஒரு குழு அமைத்து அவற்றைப் பரிசீலிக்கும் முறையைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே தாசில்தார் அவர்களின்கீழ் பணி செய்யும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் விசாரணை செய்துதான் அந்தத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அது கூடுமானவரையில் கால தாமதம் இல்லாமல் கொடுக்கப்பட்டு வருகிறது. எங்காவது புகார் இருக்குமானால், அதற்குரிய நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த முதியோர் பென்ஷன் கொடுப்பது அந்தக் கிழவர்களுக்குப் போதுமான அளவுக்கு இல்லை. அதனாலே முதியோர் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டு, அவர்களைப் பாதுகாக்க அரசாங்கம் ஏதேனும் திட்டம் வைத்து இருக்கிறதா?

1974 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்படி சமூக பாது காப்புத் திட்டங்கள், பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன. இவைகள் எல்லாவற்றையும் விரிவான முறையில் செய்வது என்பது இயலாத காரியம்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, தமிழகத்தில் முதியோர் பென்ஷனுக்காக என்று ஒரு கோடி ரூபாய் கொடுப்பதாக முதல மைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த ஒரு கோடி ரூபாய் கொடுக்கிறபோது வட்ட அளவில், மாவட்ட அளவில் என்று இந்த மாநிலம் பூராவுக்கும் ஒரு ஈவு போட்டுக் கொடுக்கிறார்களா? அல்லது அதிலே ஏதாவது ஏற்றத்தாழ்வு இருக்கிறதா? அப்படி யிருந்தால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு தொகை என்று திட்டம் வகுத்து செயல்பட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் தொகுதி இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. அது இரண் டாவது அல்லது மூன்றாவது இடத்தில் இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த உதவித் தொகை வழங்கும்போது வயதானவர்களுக்கு யாராவது உறவி னர்கள் இருந்தால், அவர்களுக்கு எல்லாம் உதவித் தொகை வழங்குவது இல்லை என்று கூறப்படுகிறது. உறவினர்கள் இருந்தும் ஆதரவு இல்லாமல், அவர்களைக் கவனிக்காமல் இருக்கும் நிலையில் உள்ள எல்லோருக்கும் அரசு மனமுவந்து உதவித் தொகை அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உறவி னர்கள் கல்மனம் பெறாமல் நல்மனம் பெற்று ஆதரிக்க வேண்டு மென்று அரசு அவர்களை எல்லாம் இந்தக் கேள்வியின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் பதில் கூறும்போது உதவித் தொகையைக் கூட் டவும் இயலாது, அதைப் பெறுகிறவர்களின் எண்ணிக்கையையும் கூட்ட இயலாது என்று கூறினார்கள். அரசாங்கத்தின் நிதி நிலை அந்த அளவுக்கு இல்லையென்றும் கூறினார்கள். ஆகவே, இப்படி உதவித் தொகை அளிப்பது அரசாங்கத்தைப் போன்று பல்வேறு

[1974 மார்ச் 7

பொது ஸ்தாபனங்களும் கொடுக்க முன்வரலாம். ஆகவே, அரசாங்கத்திற்கு இயலாது என்ற காரணத்தை முன்னிட்டு ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷன், மற்ற பொது ஸ்தாபனங்களுக்குச் சொல்லி, அவர்கள் மூலமாவது வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது ஒரு நல்ல யோசனை. இதை எந்தெந்த நிறுவனங்கள் செய்வதற்கு முன்வருகின்றனவோ, அவற்றிற்கு கூடுமான வரையில் அரசாங்கம் தனது தார்மீக உதவிகளைச் செய்ய முன்வரும்.

Library Education in schools

314 Q—THIRU R.R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state--

(a) whether there are proposals under the consideration of the Government to introduce compulsory Library Education in schools both Primary and Secondary, in this Ssate;

(b) if so, the details thereof; and

(c) the total number of pupils likely to be covered by this scheme?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) 6, 7, 8 வகுப்புகளுக்கான புதிய பாடத் திட்ட வரைவில் தமிழ் மொழி பாடத்திட்டத்தில், வாரத்திற்கு ஒரு பீரியேடை நூல் நிலையப் படிப்பிற்கென ஒதுக்கப்பட்டு உள்ளது. ஆறும் வகுப்பில் தமிழ் பாடத்திற்குப் புதிய பாடத் திட்டம் 1973-74 முதல் தமிழ் நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் நடைமுறைக்கு வந்துள்ளது. உயர் வகுப்புகளில் புதிய பாடத் திட்டம் எவ்வாண்டு முதல் நடைமுறைக்கு வரும் என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

(உ) அனைத்துப் பள்ளிகளுமே இயன்றவரை மேற்சொன்ன பாடத் திட்டக் கோட்பாட்டைச் செயல்படுத்த முயலும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தற்பொழுது உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள நூலகங்கள் மாணவர்களால் பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன. ஆகவே, வகுப்புப் பாகுபாடு இல்லாமல் எல்லா வகுப்புகளிலும் வாரத்திற்கு ஒரு பீரியட் கட்டாயமாக வைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா?